# கார்கில்ஸ் இணைய வங்கிச் சேவை தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

**<u>சொற்பொருள் விளக்கம்:-</u>**

"இணைய வங்கிச்சேவை" என்பதன் அர்த்தம் வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.cargills.com இனை உபயோகித்து பெற்றுக்கொள்ளக்கூடிய கார்கில்ஸ் வங்கியின் இணைய வங்கிச்சேவை பயன்பாட்டைக் குறிக்கின்றது.

எனது/எமது வேண்டுகோளுக்கு / பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு இணங்க, கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட் எனக்கு/எமக்கு இணைய வங்கிச்சேவை வசதியை வழங்கியுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு நான்/நாம் உடன்படுகின்றோம்.

1. இணைய வங்கிச்சேவையை உபயோகிப்பதற்காக கார்கில்ஸ் வங்கி காலத்திற்கு காலம் அறவிடுகின்ற கட்டணங்களை செலுத்துவதற்கு நான்/நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம். சேவைகளுக்கான இக்கட்டணங்களை வங்கி எந்நேரமும் மாற்ற முடியும். எனது/எமது பெயரின்/பெயர்களின் கீழான எந்த கணக்கிலிருந்தும், அத்தகைய கட்டணங்களை கழிப்பதற்கு வங்கிக்கு நான்/நாம் அனுமதி அளிக்கின்றேன்/அளிக்கின்றோம்.

2. இணைய வங்கிச்சேவை மூலமாக வங்கிக்கு வழங்கப்படும் எந்த அறிவுறுத்தல்களையும் அல்லது பெறப்படுகின்ற எந்த செய்திகளையும் ஏற்று அவற்றை செயல்படுத்துவதற்கு வங்கிக்கு இத்தால் அங்கீகாரம் அளிக்கின்றது. அதாவது விநியோகிக்கப்பட்ட கடவுச்சொல் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு என்னால்/எங்களால் வழங்கப்படுகின்ற (என்னால்/எங்களால் வழங்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட அல்லது அவ்வாறு இல்லாதவிடத்திலும் கூட) கிடைக்கப்பெறுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு நான்/நாம் பூரண பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

3. எனக்கு/எமக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச்சொல்லை எந்தவிதமான சூழ்நிலைகளின் கீழும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கு/அனுமதிக்கப்படாத தரப்பிற்கு தெரியப்படுத்தவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்க

மாட்டேன்/மாட்டோம். அத்தகைய அனுமதிக்கப்படாத நபர்களின் கைகளில் கடவுச்சொல் கிடைக்கப்பெறுமிடத்து அது தொடர்பில் உடனடியாகவே வங்கிக்கு அறியத் தருவேன்/தருவோம். கடவுச்சொல் என்பதன் அர்த்தம் இணைய வங்கிச்சேவை வசதியைப் பெற்றுக்கொள்ளும் சமயத்தில் எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட மூலக் கடவுச்சொற்கள் மற்றும் அதன் பின்னர் எனது/எமது கோரிக்கைக்கு அமைவாக வங்கியால் தோற்றுவிக்கப்பட்டு மற்றும் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சொற்கள் மற்றும் அதன் பின்னர் என்னால்/எம்மால் பிரதியீடாக உபயோகிக்கப்படுகின்ற கடவுச்சொற்களைக் குறிக்கின்றது. விநியோகம் என்பது எனது/எமது கோரிக்கையைத் தொடர்ந்து என்னால்/எங்களால் முறையாகக் கையொப்பம் இட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவாறு பதிவுத் தபால் மூலமாக/கூரியர் சேவை மூலமாக (இலங்கையில் வதியாத இலங்கைப் பிரஜைகளுக்கு கிடைக்கப்பெறும் வசதி) அல்லது வங்கி அதிகாரிகளால் (இலங்கையில் வதிவோருக்கு) தனிப்பட்டரீதியாக இனங்காணப்பட்டு என்னிடம்/எங்களிடம் நேரடியாக கையளிப்பதைக் குறிக்கின்றது.

4. கொடுக்கல்வாங்கல் தொடர்பாக வங்கியின் பதிவுகள் அனைத்தும், எல்லா நோக்கங்களுக்கும் கட்டுப்பட்டவை என்பதை நான்/நாம் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

5. என்னால்/எம்மால் இணையத்தின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான எந்தவொரு தவறுகள், முரண்பாடுகள் அல்லது குறைபாடுகள் தொடர்பில் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கும் பொறுப்பை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

6. அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் அல்லது இச்சேவையை உபயோகிப்பதால் ஏற்படும் எந்தவொரு பாதிப்பிற்கும் ஒட்டுமொத்த பொறுப்பினை நான்/நாம் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

7. என்னால்/எம்மால் வழங்கப்படுகின்ற சில கோரிக்கைகள்/அறிவுறுத்தல்கள் வங்கியின் அதிகாரியின்/அதிகாரிகளின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாக இருப்பதால், அவை உடனடியாக அல்லது தன்னியக்கமயமாக செயல்படுத்தப்படாது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம். எனக்கு/எமக்கு எவ்விதமான

முன்னறிவித்தலும் தரப்படாது என்னால்/எம்மால் வழங்கப்படுகின்ற செயல்படுத்தல் அறிவுறுத்தல்களை மாற்றம், நிறுத்தம் மற்றும் பிற்போடும் உரிமையை வழங்கி கொண்டுள்ளதை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

8. வங்கிக் கணக்கு ஒரு கூட்டுக்கணக்காக அமையும் பட்சத்தில் இணைய வங்கிச்சேவையை உபயோகிப்பதால் எழுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கும், கணக்கின் அனைத்து தரப்பினரும் கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

9. இணைய வங்கிச்சேவையை நாம்/நாம் உபயோகிப்பது தொடர்பில் எனது/எமது எழுத்து மூலமாக கோரிக்கை மற்றும்/அல்லது என்னால்/எங்களால் பதலீடு செய்யப்பட்டவாறு வங்கியால் தோற்றுவிக்கப்படுகின்ற மற்றும்/அல்லது விநியோகிக்கப்படுகின்ற மற்றும்/அல்லது அனுப்பி வைக்கப்படுகின்ற மூல கடவுச்சொல்லை/சொற்களை உபயோகித்து எனது/எமது கோரிக்கைகள் மற்றும்/அல்லது அதனைத் தொடர்ந்த கடவுச்சொற்களை எனது/எமது பயனர் அடையாளத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் போது ஏற்படும் எந்தவொரு இழப்பு மற்றும்/அல்லது இலத்திரனியல்ரீதியான தவறான தரவுப் பரிமாற்றங்களின் மூலமாக கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டினால் விளைவிக்கப்பட்ட, நேர்ந்த அல்லது பாதிப்பை ஏற்படுத்தியமையால் தோன்றிய இழப்புக்கள், செலவுகள், இழப்பீட்டுக் கோரல்கள் மற்றும் சேதாரங்களுக்கு கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டிற்கு எதிராக எவ்விதமான இழப்பீட்டுக் கோரல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க மாட்டேன்/மாட்டோம் என நான்/நாம் இத்தால் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

10. எனக்கு/எமக்கு எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி எவ்வேளையும் இந்த வசதியை இரத்துச் செய்யும் பூரண சுதந்திரத்தை வங்கி கொண்டுள்ளது.

11. நடப்பு, சேமிப்பு அல்லது வேறு எந்தவொரு கணக்குகளுக்குமுரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் இணைய வங்கிச்சேவை வசதிக்கும் பொருந்தும்.

12. எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி எவ்வேளையிலும் தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மற்றும் கட்டணங்களில்/அறவீடுகளில் மாற்றங்களைச் செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளதை நான்/நான் இத்தால் விளங்கி ஏற்றுக்கொள்கின்றோம்.

13. இணைய வங்கிச்சேவையை உபயோகிப்பதற்கு தேவையான எந்தவொரு சாதனத்தையும் பெற்றுக்கொள்வது மற்றும் பேணுவது எனது/எமது பொறுப்பு என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய சாதனங்களை முறையாக இயங்கும் வகையில் பேணுவதுடன், தீங்கிளைக்கும் ஆபத்துக்களுக்கு எதிராகவும் போதுமான பாதுகாப்பு வழிமுறைகளை முன்னெடுப்பதற்கு உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம்.

14. இணைய வங்கிச்சேவை எப்போதும் வங்கியின் உடமையாக இருப்பதுடன், அவ்வப்போது ஆய்வு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், வங்கியின் தனிப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இச்சேவை திரும்பப் பெறப்படலாம்.

15. மூன்றாம் தரப்பினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற சமயத்தில் அவ்வாறு வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் தரம், குறித்த நேர காலத்தில் கிடைக்கப்பெறுதல் அல்லது அவை கிடைக்கப்பெறுகின்றமைக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

16. இந்த ஒப்பந்தமானது இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதுடன் அதற்கமைவாக நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

17. வங்கியின் இணைய வங்கிச்சேவையின் மூலமாக வாடிக்கையாளரின் கணக்கினை(கணக்குகளை) அறிந்த வகையில் அல்லது சந்தேகத்திற்கிடமான வகையில் அனுமதியற்ற ஒருவர் செயல்படுத்த முனையும் பட்சத்தில் அதனை உடனடியாக வங்கியிடம் தெரியப்படுத்தும் பொறுப்பினை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வதுடன், அவ்வாறு வங்கிக்கு அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அனுமதியற்ற செயற்படுத்தல் அல்லது கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையால் வாடிக்கையாளருக்கு ஏற்படுகின்ற

நட்டத்தை அல்லது இழப்பினை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை வங்கி முன்னெடுக்கும். எனினும் வங்கி வேண்டுமென்றே எவ்விதமான தவறையும் செய்யாத நிலையில் வாடிக்கையாளருக்கு ஏற்படுகின்ற எவ்விதமான இழப்பு மற்றும் நட்டத்திற்கு வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளாது.

கார்கில்ஸ் வங்கியின் மொபைல் வங்கிச் சேவை வசதி தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

<u>சொற்பொருள் விளக்கம்:-</u>

"மொபைல் வங்கிச் சேவை" என்பது கார்கில்ஸ் வங்கியைக் குறிக்கின்றது,

"மொபைல் வங்கிச்சேவை" என்பது கார்கில்ஸ் வங்கியின் மொபைல் வங்கிச் சேவையை/வசதியை ("Cargills Cash" அடங்கலாக) குறிக்கின்றது. மொபைல் வங்கிச் சேவைப் பயன்பாட்டை (இதன் பின்னர் "Mobile APP" என அழைக்கப்படும்) எந்தவொரு ஸ்மார்ட் மொபைல் சாதனத்தின் மூலமாக (Android/iOS) அல்லது ஸ்மார்ட் சாதனங்கள் அல்லாத மொபைல் சாதனங்கள் மூலமாக (மொபைல் தொடர்பாடலுக்கான உலகளாவிய அமைப்பு மூலமாக – GSM) பதிவிறக்கம் செய்து கொள்ள முடிவதுடன், அவற்றை மறைகுறியாக்கப்பட்ட USSD (கட்டமைக்கப்படாத கூடுதல் சேவை தரவு) முறையில் அல்லது கார்கில்ஸ் வங்கி முகவர் மையங்கள் மூலமாகப் பெற்று, எம்மால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகுதி மொபைல் வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். "Cargills Cash" ஆனது நிதி மாற்றீடுகள், கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகள், பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு, கணக்கு மீதியை அறிந்துகொள்ளல் போன்ற மொபைல் வங்கிச் சேவை அம்சங்கள் மற்றும் வங்கியின் முகவர் மையங்களில் பண வைப்புக்கள் மற்றும் மீளப்பெறுகைகளையும் உள்ளடக்கியுள்ளது.

எனது/எமது வேண்டுகோளுக்கு / பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு இணங்க அல்லது "Cargills Cash" பாவனை தொடர்பான இங்கு தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு நான்/நாம் உடன்படுகின்றோம்.

1. கார்கில்ஸ் வங்கியின் மொபைல் வங்கிச் சேவை எனது/எமது பாவனைக்கு மட்டுமே உரியது என்பதை நான்/நாம் விளங்கிக்

கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

2. எனக்கு/எமக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச்சொல்லை எந்தவிதமான சூழ்நிலைகளின் கீழும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கு/அனுமதிக்கப்படாத தரப்பிற்கு தெரியப்படுத்தவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்க மாட்டேன்/மாட்டோம். அத்தகைய அனுமதிக்கப்படாத நபர்களின் கைகளில் கடவுச்சொல் கிடைக்கப்பெறுமிடத்து அது தொடர்பில் உடனடியாகவே வங்கிக்கு அறியத் தருவேன்/தருவோம். கடவுச்சொல் என்பதன் அர்த்தம் இணைய வங்கிச்சேவை வசதியைப் பெற்றுக்கொள்ளும் சமயத்தில் எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட மூலக் கடவுச்சொற்கள் மற்றும் அதன் பின்னர் எனது/எமது கோரிக்கைக்கு அமைவாக வங்கியால் தோற்றுவிக்கப்பட்டு மற்றும் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சொற்கள் மற்றும் அதன் பின்னர் என்னால்/எம்மால் பிரதியீடாக உபயோகிக்கப்படுகின்ற கடவுச்சொற்களைக் குறிக்கின்றது. விநியோகம் என்பது வங்கியினால் எனக்கு/எமக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அல்லது வங்கி அதிகாரிகளால் தனிப்பட்டரீதியாக இனங்கண்டு எனக்கு/எமக்கு கையளிக்கப்படுகின்ற அல்லது எனது/எமது முறையான கையொப்பமிடப்பட்ட எனது/எமது வேண்டுகோளுக்கு ஏற்ப மூன்றாம் தரப்பு ஒன்றிடம் கையளிக்கப்படுகின்ற கடவுச்சீட்டைக் குறிக்கும்.
3. மொபைல் வங்கிச்சேவையை உபயோகிப்பதற்கு தேவையான எந்தவொரு சாதனத்தையும் பெற்றுக்கொள்வது மற்றும் பேணுவது எனது/எமது பொறுப்பு என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய சாதனங்களை முறையாக இயங்கும் வகையில் பேணுவதுடன், சாதனங்களுக்கு அல்லது Mobile APP இற்கு தீங்கிளைக்கும் ஆபத்துக்களுக்கு எதிராகவும் போதுமான பாதுகாப்பு வழிமுறைகளை முன்னெடுப்பதற்கு உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம்.
4. மொபைல் வங்கிச்சேவையை உபயோகிப்பதற்கு அவ்வப்போது கார்கில்ஸ் வங்கியால் அறிவிக்கப்படுகின்ற பொருத்தமான வன்பொருள் அல்லது மென்பொருள் மற்றும் பொருத்தமான தரவு சேவைக்கு இணக்கமான மொபைல் சாதனத்தை நான்/நாம் பெற்று எனது/எமது செலவில் அதனைப் பேணுவேன்/பேணுவோம். கார்கில்ஸ் வங்கியின் Mobile APP ஆனது எனது/எமது குறிப்பிட்ட மொபைல் சாதனம், மொபைல் சாதனத்தின் இயங்கு தொகுதி அல்லது தரவு சேவைக்கு இசைவாக்கம் கொண்டது என்பதற்கு வங்கி உத்தரவாதம் அளிக்காது

என்பதையும், மொபைல் வங்கிச்சேவைக்கு நான்/நாம் உபயோகிப்பதற்குத் தேவையான எந்தவொரு மூன்றாம் தரப்பு மென்பொருளுக்கும் வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதையும் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

5. Mobile APP ஆனது நடவடிக்கைகளை சரிபார்த்தல், பணம் அனுப்பல்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளர்கள் அல்லாதவர்கள்/தனிநபர்களுக்கு பணம் அனுப்புதல், வங்கியின் முகவர் மையங்களில் பணம் மீளப்பெறல் மற்றும் எனது/எமது இசைவாக்க மொபைல் சாதனத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட Mobile APP மூலமாக வர்த்தக நிலையங்களில் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு எனக்கு/எமக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.
6. கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளர்களுக்காக வழங்கப்படுகின்ற இந்த சேவைகள் கார்கில்ஸ் வங்கியின் சுயேட்சையான தீர்மானம் என்பதையும், கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இது கிடைக்கப்பெறாமல் விடலாம் என்பதையும் நான்/நாம் விளங்கிக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

7. என்னால்/எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான எந்தவொரு தவறுகள், முரண்பாடுகள் அல்லது குறைபாடுகள் தொடர்பில் வங்கிக்கு உடனடியாக அறிவிக்கும் பொறுப்பை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

8. மொபைல் சாதனத்தை கவனிப்பாரற்று விட்டு விடாமல் இருப்பதற்கும், Mobile APP இனுள் உள் நுழைந்துள்ள சமயத்தில் ஏனைய செய்நிரல்களை தொழிற்படுத்தாமல் இருப்பதும், கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் முற்றுப்பெற்ற பின்னர் இச்சேவையில் இருந்து வெளிச்செல்வதும் எனது/எமது பொறுப்பு என்பதை நான்/நாம் விளங்கிக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.
9. வங்கிக் கணக்கு ஒரு கூட்டுக்கணக்காக அமையும் பட்சத்தில் மொபைல் வங்கிச்சேவையை உபயோகிப்பதால் எழுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கும், கணக்கின் அனைத்து தரப்பினரும் கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

10. எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் அடிப்படையான மொபைல்

இலக்கத்தில் மாற்றம் ஏற்பட்டால் அது தொடர்பில் வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியது எனது/எமது பொறுப்பு என்பதை நான்/நாம் விளங்கிக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

11. மொபைல் வங்கிச்சேவையை நாம்/நாம் உபயோகிப்பது தொடர்பில் எனது/எமது எழுத்து மூலமாக கோரிக்கை மற்றும்/அல்லது என்னால்/எங்களால் பதலீடு செய்யப்பட்டவாறு வங்கியால் தோற்றுவிக்கப்படுகின்ற மற்றும்/அல்லது விநியோகிக்கப்படுகின்ற மற்றும்/அல்லது அனுப்பி வைக்கப்படுகின்ற மூல கடவுச்சொல்லை/சொற்களை உபயோகித்து எனது/எமது கோரிக்கைகள் மற்றும்/அல்லது அதனைத் தொடர்ந்த கடவுச்சொற்களை எனது/எமது பயனர் அடையாளத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் போது ஏற்படும் எந்தவொரு இழப்பு மற்றும்/அல்லது இலத்திரனியல்ரீதியான தவறான தரவுப் பரிமாற்றங்களின் மூலமாக கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டினால் விளைவிக்கப்பட்ட, நேர்ந்த அல்லது பாதிப்பை ஏற்படுத்தியமையால் தோன்றிய இழப்புக்கள், செலவுகள், இழப்பீட்டுக் கோரல்கள் மற்றும் சேதாரங்களுக்கு கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டிற்கு எதிராக எவ்விதமான இழப்பீட்டுக் கோரல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க மாட்டேன்/மாட்டோம் என நான்/நாம் இத்தால் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

12. எனது/எமது மொபைல் இலக்கம், கணக்கு இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உபயோகித்து கார்கில்ஸ் வங்கியின் முகவர் மையங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கும் நாமே முற்றுமுழுதாக பொறுப்பு என்பதை நான்/நாம் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

13. நடப்பு, சேமிப்பு அல்லது வேறு எந்தவொரு கணக்குகளுக்குமுரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் மொபைல் வங்கிச்சேவைக்கும் பொருந்தும்.

14. எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி எவ்வேளையிலும் தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மற்றும் கட்டணங்களில்/அறவீடுகளில் மாற்றங்களைச் செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளதை நான்/நான் இத்தால் விளங்கி

ஏற்றுக்கொள்கின்றோம். மேலும், வங்கியின் சுயேச்சையான தீர்மானத்திற்கு அமைவாக இச்சேவைகளில் மாற்றம், திருத்தம், கூடுதல் பாகங்கள் அல்லது பாகங்களை நீக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

15. மூன்றாம் தரப்பினால் வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற சமயத்தில் அவ்வாறு வழங்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் தரம், குறித்த நேர காலத்தில் கிடைக்கப்பெறுதல் அல்லது அவை கிடைக்கப்பெறுகின்றமைக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

16. வங்கியின் சுயேச்சையான தீர்மானத்திற்கு அமைவாக இச்சேவையை இரத்துச் செய்யும், திருத்தம் செய்யும், அம்சங்களைக் கூட்டும் அல்லது குறைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. எந்த விடயம் தொடர்பான மாற்றங்களையும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகள் மூலமாக வங்கி எனக்கு/எமக்கு அறியத்தரும். மொபைல் வங்கிச்சேவையில் மாற்றங்களை, திருத்தங்களை, பாகங்களை சேர்ப்பிக்கும் அல்லது நீக்கும் உரிமையை கார்கில்ஸ் வங்கி கொண்டுள்ளதுடன், அது வங்கியின் சுயேச்சையான தீர்மானத்திற்கு உட்பட்டதாகும். மொபைல் வங்கிச்சேவையை நான்/நாம் தொடர்ந்தும் உபயோகிப்பது அத்தகைய மாற்றங்களை நான்/நாம் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுவதாகவே அமையும்.

17. Mobile APP இனை உபயோகிக்கும் சமயத்தில் நான்/நாம் தொழில்நுட்ப அல்லது ஏனைய சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். எனக்கு/எமக்கு ஏற்படுகின்ற அத்தகைய எந்த விதமான சிரமங்களுக்கோ அல்லது அதன் விளைவாக ஏற்படும் சேதங்களுக்கோ கார்கில்ஸ் வங்கி பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதாகவே கருதப்படுகின்றது. பாதுகாப்பு காரணங்களுக்காக Mobile APP தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளதுடன், எவ்விதமான முன்னறிவிப்பும் இன்றி எந்நேரமும் தகைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வரும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. எனக்கு/எமக்கு எவ்விதமான முன்னறிவிப்பும் விடுக்காது எந்நேரமும் உடனடியாக மொபைல் வங்கிச்சேவையை முழுமையாக

அல்லது பகுதியளவில் நான்/நாம் உபயோகிப்பதை மாற்றம் செய்யும், இரத்துச் செய்யும் அல்லது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இச்சேவையை தடை செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. இச்சேவையை நான்/நாம் பெற்றுக்கொள்ளும் மொபைல் சாதனங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

18. பின்வருவனவற்றிற்கு நான்/நாம் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்: (i) மொபைல் வங்கிச்சேவையை (கூட்டாக, “அடையப்பெறும் தகவல் விபரம்” நான்/நாம் உபயோகிக்கும் போது எனது/எமது மொபைல் சாதனங்கள், அடையப் பெறும் இலக்கம்/இலக்கங்கள், கடவுச்சொல்/கடவுச்சொற்கள், பாதுகாப்பு தொடர்பான வினா/வினாக்கள் மற்றும் பதில்/பதில்கள், கணக்கு இலக்கம்/இலக்கங்கள், உள்நுழையும் தகவல் விபரம், மற்றும் வேறு எந்தவொரு பாதுகாப்பு அல்லது அடையப்பெறும் தகவல் விபரங்களின் அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பினைப் பேணுதல்; மற்றும் (ii) மொபைல் வங்கிச்சேவை மூலமாக நான்/நாம் சேமிக்கும், பரிமாற்றம் செய்யும் அல்லது உபயோகிக்கும் தகவல் விபரங்கள் மற்றும் வேறு எந்தவொரு பாதுகாப்பு அல்லது அடையப் பெறுதல் தொடர்பான தகவல் விபரங்களை அனுமதியற்றவர்கள் அடையப் பெறுதலை அல்லது உபயோகிப்பதை தடுத்தல். எனது/எமது அடையப்பெறுதல் தகவல் விபரங்களை வேறு எவருக்கும் வழங்க மாட்டேன்/மாட்டோம் என்பதை நான்/நாம் ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம். புகைப்பட பரிமாற்றங்கள், மின்னஞ்சல் மற்றும் அடையப்பெறும் தகவல் விபரங்களை உபயோகிக்கும் போது வழங்கப்படும் ஏனைய தரவு (“தொடர்பாடல்கள்”) அடங்கலாக அனைத்து இலத்திரனியல் தொடர்பாடல்களுக்கு நான்/நாம் பொறுப்பு ஏற்கின்றேன்/ஏற்கின்றோம். அடையப்பெறும் தகவல் விபரங்களை உபயோகிப்பதால் பெறப்படும் எந்த தொடர்பாடலும் என்னால்/எம்மால் அனுப்பப்பட்டதாக அல்லது அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படுவதுடன், வங்கியில் நான்/நாம் கொண்டுள்ள கணக்கு/கணக்குகளுக்கு அறவிடப்படுவதை ஏற்றுக் கொள்கின்றேன்/கொள்கின்றோம். எனது/எமது மொபைல் சாதனங்கள் அடங்கலாக அடையப்பெறும் தகவல் விபரங்கள் தொடர்பான இழப்பு, களவு அல்லது அனுமதியற்ற பாவனை தொடர்பில் நான்/நாம் அறியப்பெறும் பட்சத்தில் வங்கிக்கு உடனடியாக அறியத்தருவேன்/தருவோம் என்பதை ஏற்றுக்

கொள்கின்றேன்/கொள்கின்றோம். எந்த விதமான இழப்பு, களவு அல்லது அடையப்பெறுவதற்கு அங்கீகரிக்கப்படாத பாவனை இடம்பெற்றுள்ளது என வங்கி நம்பும் பட்சத்தில் மொபைல் வங்கிச்சேவையை (அல்லது இவற்றின் எப்பாகத்தையும்) நான்/நாம் அடையப்பெறுவதை மறுக்கும் உரிமையை வங்கி; கொண்டுள்ளது.

19. மொபைல் வங்கிச்சேவையை உபயோகித்து நான்/நாம் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை தொடர்பில் தொகையின்/தொகைகளின் உச்ச எல்லையில் கட்டுப்பாடுகளை விதிக்கும், உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன், அவ்வப்போது அத்தகைய உச்ச எல்லைகளில் திருத்தங்களையும் மேற்கொள்ளலாம். இந்த உச்ச எல்லைகளுக்கு மேற்பட்ட தொகையை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கு உட்படுத்தும் போது வங்கி எனது/எமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையை நிராகரிக்கக் கூடும். இந்த உச்ச எல்லைகளுக்கு மேலாக கொடுக்கல் வாங்கல் செய்வதை வங்கி அனுமதித்தால் அவை இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவையாக அமைவதுடன், ஏனைய நேரங்களி;ல் அத்தகைய கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டிய கடப்பாடு வங்கிக்கு கிடையாது.

20. மொபைல் சாதனத்தை அகற்றும் மற்றும் மாற்றும் சந்தர்ப்பத்தில் அனுமதியற்றவர்கள் அடைந்து கொள்வதை தடுக்கும் வகையில் சாதனத்தில் உள்ள மொபைல் வங்கிச்சேவைப் பயன்பாட்டினை (MOBILE APP) நீக்குவது எனது/எமது பொறுப்பாகும்.

21. மொபைல் வங்கிச்சேவை தொடர்பான விடயங்கள் மற்றும் எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பான அனைத்து முறைப்பாடுகள் மற்றும்/அல்லது பிணக்குகள் பின்வரும் வழிமுறையில் வங்கிக்கு அறியத்தரப்படும் என்பதை நான்/நாம் விளங்கிக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

தொலைபேசி: 011 7640000

தொலைநகல்: 011 7640215

மின்னஞ்சல்: customersupport@cargillsBank.com

கடிதம்: இல: 696, காலி வீதி, கொழும்பு 03.

22. இதில் உள்ளடங்கியுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் அனைத்தும் என்னைப்/எம்மைப் பொறுத்தவரையில், எனது/எமது பிந்தையவர்கள், வாரிசுகள், நிறைவேற்றுனர்கள், நிர்வாகிகள் அல்லது அனுமதிக்கப்பட்ட நியமனதாரர்கள் ஆகியோரை கட்டுப்படுத்தும்.

23. எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் எந்தவொரு தரப்பினராலும் இரத்துச் செய்யப்படும் வரையில் இச்சேவை தொடர்ந்தும் முழு அதிகாரத்தைக் கொண்டிருக்கும். அனுமதியளிக்கப்படாத அல்லது சட்டவிரோதமான எந்தவொரு நோக்கங்களுக்கு அல்லது நான்/நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தின் விதிமுறைகளை சீரற்ற முறையில் நான்/நாம் பின்பற்றும் சந்தர்ப்பத்தில் இச்சேவையை இரத்துச் செய்யும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.

24. மொபைல் வங்கிச்சேவை மற்றும் Mobile APP ஆகியன எப்போதும் வங்கியின் உடமைகளாக இருப்பதுடன், அவ்வப்போது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, வங்கியின் தன்னிச்சையான தீர்மானத்திற்கு அமைவாக மீளப் பெறப்படலாம்.

இந்த ஒப்பந்தமானது இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதுடன் அதற்கமைவாக நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.